ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக், கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை பிற்பகல் 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

4. அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழுவிற்கு இச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னை பல்கலைக்கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 1-5-1992 வரை ஆகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிகளின் காலம் முடிவடையும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27-9-1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 28-9-1991 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 30-9-1991 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3-10-1991 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.